**ஜனவரி – 8**

# TNPSC துளிகள்

- வடக்கு மத்திய ரயில்வேயானது பிரயாக்ராஜ் நகரில் கும்பமேளாவில் பங்கேற்பவர்களுக்கு உதவுவதற்காக Rail Kumbh Seva எனும் கைபேசி செயலியொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- தமிழக ஆளுநர் தனது தமிழக சட்டசபை உரையில் தமிழக அரசானது அனைத்து குடும்ப அட்டை வைத்திருப்போருக்கும் பொங்கல் பரிசாக 1000 ரூபாயையும் ஒரு பரிசுக் கூடையையும் வழங்கும் என அறிவித்துள்ளார்.
- சர்வதேச வேட்டி தினமானது தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் 2018 ஜனவரி 6 ஆம் நாள் கொண்டாடப்பட்டது.
- 9 நாட்கள் நடைபெறும் சர்வதேச பட்டம் விடும் திருவிழா ஜனவரி 6ஆம் தேதியன்று குஜராத்தின் அகமதாபாத்தில் தொடங்கியது. அகமதாபாத் நகரமானது 1989 ஆம் ஆண்டிலிருந்து அதன் உத்தரயான் திருவிழாவின் அதிகாரப் பூர்வ கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக சர்வதேச பட்டம் விடும் திருவிழாவை நடத்தி வருகிறது.

# தேசியச் செய்திகள்


## பொருளாதார நீதியாக நலிவுற்றோர்க்கு பொதுப் பிரிவில் 10% இட ஒதுக்கீடு

- பொதுப் பிரிவில் பொருளாதார ரீதியாக நலிவுற்ற பிரிவினருக்கு வேலை வாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் 10% இடஒதுக்கீடு செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவதற்கு அரசியலமைப்பின் சரத்து 15 மற்றும் 16ல் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.
- இந்த இட ஒதுக்கீடானது 8 லட்சத்திற்கும் குறைந்த வருட வருமானத்தினையும் 5 ஏக்கர் வரையிலான நிலத்தினையும் உடையோர்க்கு கிடைக்கப் பெறும்.
- ஏற்கனவே உள்ள 50% இடஒதுக்கீட்டிற்கு மேல் கூடுதலாக இந்த 10 % இட ஒதுக்கீடானது இருக்கும்.

## பொதுத்துறை நிறுவனங்களின் மீதான ஆய்வு 2017-18

- பல்வேறு மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் செயல் திறனை ஆய்வு செய்த பொதுத் துறை நிறுவனங்களின் மீதான ஆய்வு அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.
- இந்த ஆய்வானது மத்திய கனரக தொழிற்சாலை & பொதுத்துறை நிறுவனங்கள் அமைச்சகத்தின் பொதுத்துறை நிறுவனங்களுக்கான துறையால் மேற்கொள்ளப்பட்டது.
- இந்தியன் ஆயில் நிறுவனம், ONGC மற்றும் NTPC ஆகியவை 2017-2018 ஆம் ஆண்டில் மிக அதிக லாபம் பெற்ற பொதுத் துறை நிறுவனங்களாகும்.

- தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக BSNL, ஏர் இந்தியா மற்றும் MTNL ஆகிய நிறுவனங்கள் அதிக அளவில் இழப்புகளை ஏற்படுத்திய நிறுவனங்களாக உள்ளன.




- 2017-18 ஆம் ஆண்டில் 339 மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளதாக இந்த ஆய்வு குறிப்பிட்டுள்ளது. இதில் 257 நிறுவனங்கள் செயல்பாட்டில் உள்ளன.

## ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் NABCB-க்கு அங்கீகாரம்

- இந்தியாவின் தேசிய அங்கீகார அமைப்பான NABCB ஆனது ஆசிய பசிபிக் பிராந்தியங்களில் உள்ள OHSMS சான்றிதழ் அளிக்கும் அமைப்புகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் திட்டத்திற்கு சமமான ஒரு இடத்தைப் பிடித்துள்ளது.
    - சான்றளிப்பு மையங்களுக்கான தேசிய அங்கீகார வாரியம் – (National Accreditation Board for Certification Bodies - NABCB)
    - தொழில் சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு அமைப்பு மேலாண்மை அமைப்பு (Occupational Health and Safety Management Systems - OHSMS).
- இது பசிபிக் அங்கீகார ஒத்துழைப்பின் பல்முனை அங்கீகார ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது.
- இது சர்வதேச அமைப்புகளுக்கு சமமான அமைப்புகளின் கீழ் சர்வதேச நெறிமுறைகளுக்கு ஏற்ப சான்றிதழ் வழங்கும் அல்லது ஆய்வு மேற்கொள்ளும் அமைப்புகளின் அங்கீகாரத்திற்கு பொறுப்புடைய இந்திய தரக் குழுமத்தின் ஒரு அங்கமாகும்.
- NABCB ஆனது தகுதி வாய்ந்த சான்றளிப்பு அமைப்புகளின் மூலமாக சர்வதேச தர நிலைப்படி சான்றிதழ் வழங்கப்படுவதை உறுதிபடுத்துவதன் மூலம் உலக சந்தையில் இந்தியப் பொருட்களின் ஏற்றுமதிக்கு உதவுகிறது.
- இது ஹாங்காங் மற்றும் மெக்ஸிகோவின் அங்கீகார அமைப்புகளுக்கு அடுத்ததாக ஆசிய பசிபிக் பிராந்தியங்களில் அங்கீகரிக்கப்பட்ட 3வது அமைப்பாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## பதவியை துறந்த முதல் மலேசிய அரசர்

- மலேசிய வரலாற்றிலேயே முதன் முறையாக தனது 5 வருட பதவிக் காலம்

முடிவடையும் முன்னரே மலேசியாவின் அரசரான ஐந்தாம் சுல்தான் முகமது தனது 15வது யாங் டி-பெர்டுவான் அகோங் என்ற பதவியிலிருந்து விலகியுள்ளார்.



- மலேசியாவின் சுழற்சி முறையிலான முடியாட்சி அமைப்பின் கீழ், ஒரு அரசர் 9 மலேசிய அரசக் குடும்பங்களிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு ஒவ்வொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
- அடுத்த அரசரின் தேர்வானது, அனைத்து 9 அரசக் குடும்பத்தினரையும் இணைத்து உருவாக்கப்பட்ட அரசர்கள் குழுவினால் வாக்கெடுப்பு முறையில் தேர்வு செய்யப்படும்.

## உலக வங்கியின் தலைவர் ராஜினாமா

- 2022-ல் முடிவடையும் பதவிக் காலத்திற்கு மூன்றரை ஆண்டுகளுக்கு முன்னரே வரும் பிப்ரவரி 1 ஆம் தேதி உலக வங்கியின் தலைவரான ஜிம் யோங் கிம் பதவி விலகுகிறார்.
- இவர் 2012 ஆம் ஆண்டில் உலக வங்கியின் தலைவராக முன்னாள் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவால் நியமிக்கப்பட்டார்.
- இரண்டாவது 5 ஆண்டு காலத்திற்கு வங்கியின் வாரியத்தினால் 2017 ஆம் ஆண்டில் மீண்டும் நியமிக்கப்பட்டார்.
- கிம்மின் தலைமையிலான உலக வங்கியானது 2030க்குள் தீவிர வறுமையை அகற்றுவதை இலக்காக அமைத்திருந்தது.
- உலக வங்கியின் தலைமை செயல் அதிகாரியான கிறிஸ்டாலினா ஜார்ஜிவா கிம்மின் பதவி விலகுவதைத் தொடர்ந்து பிப்ரவரி 1ஆம் தேதிக்குப் பின்னர் இடைக்காலத் தலைவராக பணியாற்றுவார்.

# பொருளாதாரச் செய்திகள்

## கேரளாவின் பேரழிவு செஸ் வரி - GST குழு ஒப்புதல்

- பீகாரின் துணை முதலமைச்சர் சுஷில் குமார் மோடியின் தலைமையிலான மாநில நிதியமைச்சர்களின் குழுவானது கேரளாவின் 1% பேரழிவு செஸ் வரிக்கு ஒப்புதல்

அளித்துள்ளது.

- இந்த பேரழிவு செஸ் ஆனது கேரளாவின் புனரமைப்புப் பணிகளுக்காக இரண்டு ஆண்டுகளுக்கு விதிக்கப்படும்.
- ஏதேனும் இயற்கைப் பேரழிவு அல்லது பேரழிவுகளின் போது கூடுதல் நிதிகளை சேர்க்க குறிப்பிட்ட காலத்திற்கு சிறப்பு வரிகளை விதிக்க GST சட்டம் வகை செய்துள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## விமான நிலையத்தில் ஒற்றைப் பயன்பாட்டு நெகிழிக்குத் தடை

- இந்திய விமான நிலைய ஆணையமானது 16 விமான நிலையங்களில் ஒற்றைப் பயன்பாட்டு நெகிழியாலான பொருட்களுக்கு சமீபத்தில் தடை விதித்துள்ளது.
- இந்த 16 விமான நிலையங்களும் ஒற்றைப் பயன்பாட்டு நெகிழியற்ற விமான நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- அவையாவன இந்தூர், போபால், அகமதாபாத், புவனேஸ்வர், திருப்பதி, திருச்சி, விஜயவாடா, டேராடூன், சண்டிகார், வடோதரா, மதுரை, ராய்ப்பூர், விசாகப்பட்டினம், புனே, கொல்கத்தா மற்றும் வாரணாசி ஆகியவை தடை விதிக்கப்பட்டுள்ள 16 விமான நிலையங்களாகும்.

# விளையாட்டுச் செய்திகள்

## பிரிஸ்பேன் இன்டர்நேஷனல் 2019

- ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்தில் ஆஸ்திரேலிய ஓபன் தொடரின் ஒரு பகுதியாக பிரிஸ்பேன் இன்டர்நேஷனல் 2019-ன் 11வது பதிப்பு நடைபெற்றது.



- ரஷ்யாவின் D.மெட்வேதேவ்வை வீழ்த்தி ஜப்பானின் K. நிஷிகோரி ஆண்களுக்கான

ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்றார்.

- உக்ரைனின் L.சுரேன்கோவை வீழ்த்தி செக் குடியரசின் K.பிளிஸ்கோவா பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்றார்.

## AFC ஆசிய கோப்பை 2019

- அபுதாபியில் உள்ள அல் நஹ்யான் விளையாட்டரங்கில் இந்திய தேசியக் கால்பந்து அணியானது வரலாற்றிலேயே முதன் முறையாக தாய்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் 4 - 1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.



- ஆசியக் கோப்பை வரலாற்றில் இது இந்தியாவின் மிகப் பெரிய வெற்றியாகும்.
- இந்திய அணியின் கடைசி வெற்றியானது ஆசியக் கோப்பையில் 1964 ஆம் ஆண்டு இஸ்ரேலில் நடைபெற்ற போட்டியில் ஹாங்காங்கிற்கு எதிராக 3-1 என்ற கணக்கில் தற்செயலாக அமைந்த மிகப் பெரிய வெற்றியாகும்.
- செட்ரியின் இரண்டு கோல்களானது அவரை ஆசியக் கோப்பையில் அதிக கோல்களை அடித்த வீரராக மட்டுமல்லாது கிறிஸ்டியானா ரொனால்டோவுக்கு அடுத்ததாக தற்போது விளையாடிக் கொண்டிருக்கும் வீரர்களில் இரண்டாவது அதிக கோல் அடிப்பவராகவும் மாற்றியுள்ளது.

## ஆஸ்திரேலியாவில் இந்தியாவின் முதலாவது டெஸ்ட் தொடர் வெற்றி

- இந்திய கிரிக்கெட் அணியானது அண்மையில் ஆஸ்திரேலியாவில் 71 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன் முறையாக 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்று பார்டர்-கவாஸ்கர் டிராபியைத் தக்க வைத்துக் கொண்டது.
- ஆஸ்திரேலியாவில் டெஸ்ட் தொடரை வென்ற முதல் ஆசிய நாடாகவும் ஒட்டு மொத்த அளவில் 5வது நாடாகவும் ஆகியுள்ளது.
- ஆஸ்திரேலியாவில் டெஸ்ட் தொடரை வென்ற முதல் ஆசிய கேப்டனாக விராட் கோலி ஆகியுள்ளார்.
- 1947ஆம் ஆண்டிலிருந்து ஆஸ்திரேலியாவிற்கு இந்திய அணி சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் போதிலும் இதுவரை எந்த தொடரிலும் வெற்றி பெற்றதில்லை.
- சிட்னியில் நடைபெற்ற 4-வது டெஸ்ட் போட்டியில் இந்தியா ஆஸ்திரேலியாவை பாலோ-ஆன் முறையை மேற்கொள்ளுமாறு செய்யுமாறு கேட்டு கொண்டதானது

1988-ல் ஆஸ்திரேலிய அணியானது பாலோ ஆன் முறையைத் தொடருமாறு கேட்டு கொள்ளப்பட்ட பிறகு ஏற்பட்ட முதல் முறையாகும்.



- இந்த தொடரின் 3-வது டெஸ்ட் போட்டியில் பெற்ற வெற்றியானது இந்தியாவின் 150-வது டெஸ்ட் வெற்றியாகும்.
- ஆஸ்திரேலியா (384) இங்கிலாந்து (364), மேற்கிந்திய அணி (171), தென் ஆப்பிரிக்கா (162) ஆகிய அணிகளைத் தொடர்ந்து 150 வெற்றிகளைப் பெற்ற 5வது அணியாக இந்தியா மாறியுள்ளது.
- சேத்தேஸ்வர் புஜாரா இந்த டெஸ்ட் தொடரின் சிறந்த ஆட்டக்காரராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ஆஸ்திரேலியாவின் டெஸ்ட் தொடரில் அதிக பட்ச பந்துகளை எதிர்கொண்ட இந்திய மட்டை வீரராக முன்னாள் இந்திய கேப்டனான ராகுல் டிராவிட்டை (1203) முந்தி புஜாரா (1258) சாதனை படைத்துள்ளார்.
- ஆஸ்திரேலியாவில் 100 ரன்கள் எடுத்த ஒரே இந்திய விக்கெட் கீப்பர் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் 150-க்கும் அதிகமாக ரன்கள் எடுத்த 4வது விக்கெட் கீப்பராக ரிஷப் பந்த் ஆகியுள்ளார்.

- - - - - - - - - - - - - - -